FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301674

1. District : Salem PS: VAO AC Year: 2026 FIR No.: 15/AC/2026 Date: 12.10.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as Sections பிரிவுகள்: 7(a) and
(ii) Act சட்டம்: amended in 2018 Sections பிரிவுகள்: 12 r/w 7(a)
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 28.09.2026 / 10.30 hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to : 05.10.2026 / 11.00 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை 09.10.2026 / 12.40 hrs

(b) Information Received at PS. Date : 12.10.2026 Time : 06.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Computer typed
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Sekkadipalti VAO office, 40 km East.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : Sekkadipalti village, Pethanaickanpalayam Taluk, Salem District.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. T. Ramamoorthy (b) Father's/ Husband's Name : Thangavasu @ Thangaraji
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 46 years (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Business (g) Address : Sekkadipalti village, Pethanaickanpalayam Taluk, Salem District.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) Tr. Saravanan, VAO, Sekkadipalti village
2) Tr. Madhavan

8. Reasons for delay, in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

-

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheets are enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

T. Ramy.
12.10.2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

12.10.2026

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
12.10.2026 / 0800hrs

Name: பெயர் S. MURUGAN
Rank: நிலை Inspector of Police

சேலம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 15/AC/2026 சட்டப்பிரிவு 7(a) and 12 r/w 7(a) of PC Act 1988 as amendment in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.

சமர்ப்பிக்கப்படுகிறது:

இன்று 12.10.2026ம் தேதி திங்கட்கிழமை காலை 06.00 மணிக்கு சேலம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, திரு.ராமமூர்த்தி த/பெ தங்கராசு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர், T.ராமமூர்த்தி, த/பெ.தங்கராசு (எ) தங்கராஜி, தும்பல் மெயின் ரோடு, செக்கடிப்பட்டி, பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், சேலம் மாவட்டம், பெறுநர், உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, சேலம் மாவட்டம், ஐயா, நான் சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையம் வட்டம் செக்கடிப்பட்டியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் செக்கடிப்பட்டியில் கறிகடை வைத்து நடத்திவருகிறேன். எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்ட செக்கடிப்பட்டி கிராம சர்வே எண்.279ல் பட்டா எண்.1152, 1316 மற்றும் 918ல் உள்ள 6 சென்ட நிலத்தை எனது பெயருக்கு மாற்றி ஒரு உயில் எழுதி 02.07.2024 ஆம் தேதி எனது அப்பா பெத்தநாயக்கன்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர எண்.27/2024படி அந்த உயிலை பதிவு செய்துள்ளார். பிறகு, 28.06.2026 ஆம் தேதி எனது அப்பா உடல் நலம் சரியில்லாமல் இறந்துவிட்டார். நான் அந்த நிலத்தினை எனது பெயரில் பட்டா மாற்றம் செய்யக்கோரி 19.09.2026 ஆம் தேதி பெத்தநாயக்கன்பாளையம் துணை வட்டாட்சியருக்கு ஆன்லைனில் விண்ணப்பம் போட்டேன். அந்த விண்ணப்பம் சம்மந்தமாக 28.09.2026 தேதி அன்று காலை 10.30 மணிக்கு கிராம நிர்வாக அலுவலர் திரு.சரவணன் அவர்களை செக்கடிப்பட்டியில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்து கேட்டபோது, பட்டா பெயர் மாற்றம் செய்ய ஏற்பாடு செய்ய தனக்கு தனியாக ரூ.6,000/- தர வேண்டும் என்று கேட்டார். அப்போது அந்த அலுவலகத்தில் இருந்த மாதவன் என்பவரும் ரூ.6000/- கொடுத்துவிடுங்கள் அப்போதுதான் உங்கள் வேலை நடக்கும் என்று சொன்னார். நான் எதுவும் பேசாமல் வந்துவிட்டேன். அதன்பிறகு, 05.10.2026 ஆம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு செக்கடிப்பட்டி கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்று அங்கு இருந்த கிராம நிர்வாக அலுவலர் திரு.சரவணன் அவர்களிடம் என்னுடைய விண்ணப்பம்

சம்மந்தமாக கேட்டபோது, அந்த விண்ணப்பம் இன்றுதான் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே, மீண்டும் விண்ணப்பிக்குமாறும் சொல்லி ஏற்கனவே எவ்வளவு சொன்னேன் என்று VAO சரவணன் கேட்டார். அதற்கு அந்த அலுவலகத்திலிருந்த மாதவன் என்பவர், ரூ.6000/- கேட்டோம் என்று சொன்னார். அதற்கு,VAO சரவணன்,ரூ.5000/- கொடுக்குமாறு என்னிடம் கேட்டார். அதற்கு நான், சார் அவ்வளவு தொகை தற்போது என்னால் முடியாது என்று சொன்னபோது, சரி ரூ.4000/- கொடுத்துவிடு, பட்டா பெயர் மாற்றம் செய்ய ஏற்பாடு செய்துவிடலாம் என்று சொன்னார். மேலும், பட்டா எண்.1316 ஆனது ஏற்கனவே என்னுடைய பெயரில் இருந்ததால், அதனை விட்டுவிட்டு, மற்ற பட்டா எண்கள்.1152, 918க்கு மட்டும் விண்ணப்பம் செய்யுமாறு சொன்னார். நான் சரிங்க சார் இரண்டு மூன்று நாட்களில் வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்து, அன்றைய தினமே ஆன்லைன் மூலம் மீண்டும் பட்டா பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பம் ஒன்று போட்டேன். ஆனால் எனக்கு வீட்டில் நிறைய வேலைகள் இருந்ததால் அவரை பார்க்க போக முடியவில்லை. 09.10.2026 ஆம் தேதி பகல் சுமார் 12.40 மணியளவில் கிராம நிர்வாக அலுவலர் சரவணன் அவரது செல்போன்: 9940718089ல் இருந்து என்னுடைய செல்போன் எண்:8778444394க்கு போன் செய்தார். நான் அப்போது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்ததால் அவரது காலை எடுக்க முடியவில்லை. எனவே, நான் வண்டியை நிறுத்திவிட்டு மீண்டும் அந்த எண்ணுக்கு கால் செய்தபோது, தான் கிராம நிர்வாக அலுவலர் சரவணன் பேசுவதாகவும், தான் கேட்ட பணம் ரூ.4000/- ரெடியா என்றும் கேட்டார். அதற்கு நான் சார் வீட்டில் கொஞ்சம் கஸ்டம் சார் அதனால தான் வரமுடியல, திங்கட்கிழமை வந்து பார்க்கட்டுமா சார் என்று கேட்டேன். அதற்கு அவரும் சரி, திங்கட்கிழமை வந்து தான் கேட்ட பணம் ரூ.4000/-த்தை கொடுக்குமாறு சொன்னார். பணம் கொடுத்தால்தான் பட்டா பெயர் மாற்றம் செய்ய ஏற்பாடு செய்ய முடியும் இல்லை என்றால் பட்டா கிடைக்காது என்றும் முடிவாக சொல்லிவிட்டார். கிராம நிர்வாக அலுவலர் திரு.சரவணன் அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுத்து எங்களது நிலத்திற்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய எனக்கு விருப்பமில்லை. அவர் கேட்ட பணம் ரூ.4,000/-த்துடன் அவர் சொன்னபடி இன்று அவரை சந்திக்க முடிவு செய்துள்ளேன். எனவே,என்னிடம் லஞ்சமாக பணம் கேட்ட VAO சரவணன மீதும், மாதவன் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd/-xxxxxxxx (Ramamoorthy) 12.10.2026. Sir,

Received the computer typed complaint on 12.10.2026 at 06.00hrs Sd.xxxxxx(S.Murugan), 12.10.2026, Inspr. of Police, V & AC, Salem.

Sir, a confidential verification was made on the general reputation of the accused Tr.Saravanan, VAO, Sekkadipatti Village, Pethanickanpalayam Taluk, Salem District and Tr.Madhavan, which is learnt to be not good. Similarly, the antecedents of the complainant was also verified and nothing came to adverse. Oral concurrence of the Superintendent of Police, West Range was also obtained. Then, a case in Salem V & AC Cr.No. 15/AC/2026 u/s 7(a) and 12 r/w 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 was registered on 12.10.2026 at 07.00 hrs. The original FIR along with the original complaint was submitted to the Hon'ble court of Special District Judge for Trial of Cases under PC Act, Salem and the remaining copies were submitted to the officers concerned. Sd.xxxxxx(S.Murugan), 12.10.2026, Inspr. of Police, V & AC, Salem.

12/10/2026

Inspr. of Police,
V & AC, Salem.